

# மக்களவைத் தேர்தல் 2024

# இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி தேர்தல் அறிக்கை

இந்திய நாடாளுமன்றத்திற்கான, 18–ஆவது மக்களவை பொதுத் தேர்தல், இதற்கு முன் நடந்த தேர்தல்களிலிருந்து முற்றிலும் வித்தியாசமானது. சுமார் 94.5 கோடி வாக்காளர்களை கொண்ட மிகப்பெரிய ஜனநாயக நாடான இந்தியாவை, அடுத்த ஐந்தாண்டுகளுக்கு யார் ஆட்சி செய்யப் போகிறார்கள் என்பதே இதற்கு முன்னர் கேள்வியாக இருந்தது. ஆனால், இந்தத் தேர்தலில் நாம் எதனை தேர்வு செய்யப் போகிறோம்? அது சர்வாதிகாரமா அல்லது ஜனநாயகமா என்பது தான் மக்கள் முன்பு உள்ள கேள்வியாகும்.

அரசியல் சாசனத்தில் குறிப்பிட்டபடி, இந்தியாவை ஓர் இறையாண்மையுள்ள சோசலிச மதச்சார்பற்ற ஜனநாயக குடியரசாக தொடர்ந்து முன்னெடுத்துச் செல்வதற்கான வழிகள் அனைத்தையும், கடந்த பத்து ஆண்டுகளாக ஆட்சி நடத்திய பிரதமர் திரு.நரேந்திர மோடியும், பாரதிய ஜனதா கட்சியும், அதன் தலைமையிலான தேசிய ஜனநாயக கூட்டணியின், ஒன்றிய அரசும் சிதைத்தும், அழித்தும் வருவது பெரும் அச்சுறுத்தலை உருவாக்கியுள்ளது.

அரசியலமைப்புச் சட்டமும் குடியரசின் அடிப்படை கோட்பாடுகளான மதச் சார்பின்மை, சோசலிசம், கூட்டாட்சி முறைமை, சமத்துவம், சுதந்திரம், சகோதரத்துவம், சமூக நீதி ஆகியவை தொடர்ச்சியான தாக்குதலுக்கு உள்ளாகி வருகின்றன.

அண்ணல் அம்பேத்கர் தலைமையில் வரையப்பட்ட அரசியல் அமைப்புச் சட்டமே குறி வைத்து தாக்கப்படுகிறது. அதனை மாற்றி விட்டு மனு ஸ்மிருதியை அடிப்படையாகக் கொண்ட அரசியல் சாசனம் ஆக்கப் போவதாக பகிரங்கமாக பாஜக அமைச்சர்கள் பேசுகிறார்கள். அதனை செய்ய நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பங்கு உறுப்பினர்கள், அதாவது 362 உறுப்பினர்கள், தேவை என்பதால் தான், 370 மற்றும் 400 இடங்களில் வெற்றி பெறுவோம் என்று பிரதமர் மோடி தேர்தல் பிரச்சாரம் செய்கிறார். ஆம்! அரசியல் சட்டம் ஆபத்தில் இருக்கிறது.

இந்தியாவின் அரசியல் வெளியை, மதம், சாதி, மூடநம்பிக்கைகள் ஆகிய பிரச்சினைகளே ஆட்கொண்டிருக்கின்றன. மதம் ஒரு கூர்மையான அரசியல் ஆயுதமாக மாற்றப்பட்டிருக்கிறது.

ஆர்எஸ்எஸ் அமைப்பும் அதனோடு இணைந்த தீவிர வலதுசாரி அமைப்புகளும் அரசியல் களத்தில் முன் வரிசையில் நின்று அதிகார வெறியோடு மக்களை பிளவுபடுத்தும் குறுகிய நோக்கத்தோடு செயல்பட்டு, வகுப்புவாத, இந்துத்துவா மதவெறி, பாசிசத் தன்மையோடு, நமது நாடு பேணி வளர்த்து வரும் 'வேற்றுமையில் ஒற்றுமை காணும்' பண்பை சிதைத்து வருகின்றன.

ஒற்றைத்தன்மை கொண்ட ஒரே மாதிரியான உள்ளொடுங்கிய சமூக அரசியல் முறைமையை கட்டமைக்கும் தீய நோக்கத்துடன் **இந்துத்துவா, இந்துராஷ்டிரா** என்ற பெயரில் மதவெறி அரசியல் கருத்துக்களை திணித்து வருகின்றன.

இந்துத்துவ வகுப்புவாத சக்திகள் சகிப்புத்தன்மை கொண்ட இந்து மக்களிடம், இந்துத்துவா என்ற மதவெறி அரசியலை திணிக்கின்றன. "பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்" என்ற சமத்துவ கோட்பாட்டை சிதைக்கின்றன. பிறப்பின் பெயரால் உயர்ந்தவன், தாழ்ந்தவன், தீண்டதகாதவன், என மனிதர்களைப் பிளவுபடுத்தி வரும் வர்ணாசிரம முறையை நிலை நிறுத்த தம்மாளான அனைத்தையும் செய்து கொண்டிருக்கின்றன.

மோடியின் பிஜேபி அரசு எதேச்சதிகாரமும், வாய்ச்சவடாலும் கொண்டதாக மாறிவிட்டது.

அரசின் நடவடிக்கைகள் மீது கேள்வி எழுப்புபவர்கள், அதன் கொள்கைகளை விமர்சிப்பவர்கள், அரசாங்கம் பதில் தர வேண்டும் என்று வலியுறுத்துபவர்கள், தேச விரோதிகள், நகர்ப்புற நக்சல்கள் என்று முத்திரை குத்தப்பட்டு வேட்டையாடப்படுகிறார்கள்.

உச்ச நீதிமன்றமே கண்டிக்கும் வகையில், அவர்கள் மீது தேசத்துரோக குற்றம் சுமத்தப்படுகிறது. பிணையில் கூட வர முடியாத அளவுக்கு சிறை தண்டனை வழங்கப்படுகிறது. இதன் உச்சகட்டமாக கொலையும் செய்யப்படுகிறார்கள். கொலையாளிகளை அரசு பாதுகாக்கிறது.

அரசியல் சாசனம் உறுதி செய்துள்ள இட ஒதுக்கீடும், சமூக நீதியும், வன்கொடுமை தடுப்புச் சட்டமும் தொடர்ந்து இழிவுபடுத்தப்படுகின்றன. வன உரிமைச் சட்டமும் சரிவர அமல்படுத்தப்படவில்லை. பழங்குடி மக்களும் தலித் மக்களும் தொடர்ச்சியாக தாக்குதலுக்குள்ளாகி வருகின்றனர்.

முஸ்லிம்களை எதிர்முனைப்படுத்தி, ஏனையோர்களை அந்நியமாக்கி ஒருங்கிணைப்பது ஆர்எஸ்எஸ் கடைப்பிடிக்கும் சித்தாந்தமாகும். கடந்த 10 ஆண்டுகளில் அவர்களின் செயல்பாடு தீவிரப் படுத்தப்பட்டுள்ளது. எந்த தண்டனைக்கும் ஆளாக மாட்டோம் என்ற தைரியத்தில் இஸ்லாமியர்களை தெருவில் வைத்து அடித்துக் கொல்கிறார்கள், துப்பாக்கியால் சுட்டும் கொல்கிறார்கள்.

ஒட்டுமொத்த இஸ்லாமிய மக்களை கலங்கப்படுத்தி, இந்து மக்களை அவர்களுக்கு எதிராக ஒன்று திரட்டுகின்றனர். ஐந்தாண்டுகளுக்கு முன்பு குடியுரிமைச் சட்டத்தில் திருத்தம் கொண்டு வந்ததை ஒட்டி எழுந்த கலவரங்கள் ஆட்சியாளர்களுக்கு சிறுபான்மை யினர் மீது உள்ள வெறுப்பை மீண்டும் மெய்ப்பித்தன.

இந்தத் தேர்தல் அறிவிக்கப்படுவதற்கு சில நாட்களுக்கு முன்பு, அந்தச் சட்டத்துக்கான விதிகளை அறிவிக்கை செய்து உடனடியாக செயல்படுத்துவதாக அறிவித்து விட்டனர். முன்னர் நடந்த போராட்டங்களுக்கு தலைமை ஏற்றவர்களுக்கு காவல்துறை தனித்தனியாக மிரட்டல் விடுத்துள்ளது.

நாரி சக்தி என்ற பெயரில் பெண்மையை கொண்டாடுவதாக வாய் கிழிய பேசினாலும், உண்மையில் பெண்கள், குழந்தைகளின் நிலை பாதுகாப்பற்ற துயரம் நிறைந்ததாக தொடர்கிறது.

இந்தியாவில் பாலியல் வல்லுறவு குறித்த புகார்கள் நாளொன்றுக்கு 86 வழக்குகள் பதிவு செய்யப்படுகின்றன. சென்ற ஆண்டில் பாலியல் வல்லுறவு, கும்பல் வல்லுறவு, பெண் கொலை, பெண் கடத்தல் ஆகிய வகைகளில் 65 ஆயிரத்து 743 வழக்குகள் பதிவாகியுள்ளன. ஒவ்வொரு ஆண்டும் இந்த எண்ணிக்கை அதிகரித்துக் கொண்டே செல்கிறது. காவல் துறையின் கவனத்திற்கு வராமல், அல்லது வந்தும் கவனிக்கப்படாமல் விடுபட்ட இதே போன்ற கொடூர நிகழ்வுகள் இன்னும் பல மடங்காகும் என ஆய்வுகள் தெரிவிக்கின்றன.

காஷ்மீரில், கத்துவா எனும் ஊரில் எட்டு வயது இஸ்லாமிய சிறுமி, ஆசிபா பானுவை கடத்திச் சென்று பாலியல் வல்லுறவு செய்து, கொடூர கொலை செய்த 8 பேரை கைது செய்யக்கூடாது என்று தேசியக் கொடி ஏந்தி போராட்டம் நடத்திய, பாஜகவுக்கு பெண் சக்தியை பற்றி பேசுவதற்கு அருகதை இல்லை.

சம வேலைக்கு சம ஊதியச் சட்டம் இருந்தாலும் கூட இந்தியாவில் ஒரே வேலையை செய்யும் பெண்களுக்கும் ஆண்களுக்கும் இடையே 27 சதவீதம் வரை ஊதிய வித்தியாசம் இருக்கிறது. பெண்கள் திறமைகளை வெளிப்படுத்த முடியாமல் பாலினப் பாகுபாடு தடுக்கிறது.

குழந்தைகளின் உரிமைகளை பாதுகாக்க, கல்வி உரிமைச் சட்டம் போன்ற பல சட்டங்கள் இருந்த போதிலும் அவை சரியாக செயலாக்கப்படுவதில்லை. இதனால் சுரங்கம் ரசாயனம் போன்ற அபாயகரமான தொழில்களிலும் குழந்தை தொழிலாளர்கள் ஈடுபடுத்தப்படுகின்றனர்.

முதியோர்களின் வாழ்நிலை இன்னும் கவலைக்கிடமானதாக மாறியிருக்கிறது. இந்தியாவில் 55 வயதுக்கு மேற்பட்டோர் 25 கோடிக்கும் அதிகமாக இருக்கின்றனர். வயது முதிர்ந்த ஆண்களில் 30 சதவீதத்தினர், பெண்களில் 75 சதவீதத்தினர் தமக்கென சொந்த வருமானம் இல்லாமல், பிறரை அண்டி வாழும் அவலத்தை அரசு தரும் விபரம் தெரிவிக்கிறது. முதியோர் மாதிரி தேச தேசியக் கொள்கை என்று நெடுங்காலமாக பேசப்பட்டு வருகிறது. ஆனால், அது அமலாக்கப்படவே இல்லை.

''நல்ல காலம் வருகிறது'', ''அனைவருக்கும் வளர்ச்சி'' என்று உறுதி சொல்லித்தான் பாஜக ஆட்சியைப் பிடித்தது. அவை வெறும் வெற்று ஆரவாரச் சொற்களாக காற்றில் கலந்து விட்டன. அந்தக் கட்சியே தொலைக்காட்சிகளில் இப்போது 'கஷ்ட காலம் போய்விடும்'' என்று விளம்பரப்படுத்துகின்றது. **10 ஆண்டுகளாக நடத்திய ஆட்சியில் நல்ல காலம் இல்லை, ''கஷ்ட காலம் மட்டும் தான் என்பதை ஆளும் கட்சியே ஒப்புக் கொள்கிறது.''**

இந்தியா வளர்ந்து விட்டது என்றும் உலக அளவில் ஐந்தாவது பெரிய பொருளாதார நாடு என்றும் பிரதமர் மோடி மார்தட்டிக் கொள்கிறார். ஆனால் வளர்ச்சி யாருக்கு என்பதே கேள்வி?

மோடியின் 2014–19 முதல் ஐந்தாண்டு ஆட்சிக் காலத்தில் அதானியின் சொத்து 121 சதவீதம் அதிகரித்தது. ரூபாய் 100 கோடிக்கும் அதிகமான வருமானம் பெறுபவர்கள் எண்ணிக்கை 12–ல் இருந்து 166 ஆக அதிகரித்திருக்கிறது. அது இப்போது மேலும் பன்மடங்கு அதிகரித்துள்ளது.

இந்தியாவின் மொத்த சொத்துக்களில் சரி பாதிக்கும் அதிகமான சொத்துக்கள் வெறும் ஒரு கோடி பேரின் கைகளில் குவிந்துள்ளன. அதே நேரத்தில் அடிமட்டத்தில் இருக்கும் 70 கோடிக்கு மேற்பட்ட மக்களுக்கு சொந்தமானவை வெறும் மூன்று சதவீத சொத்துக்கள் மட்டும்தான்.

இந்தியா பெரும் பணக்காரர்களுக்கான நாடாக மட்டுமே வெகு வேகமாக முன்னேறுவது துரதிஷ்டவசமானதாகும். பெரும் பணக்காரர்கள் வளர்வதற்காக, நாட்டின் விளிம்பு நிலையில் உள்ள தலித்துகள், பழங்குடி மக்கள், முஸ்லிம்கள் பெண்கள் அமைப்பு சாரா தொழிலாளர்கள் ஆகியோரின் உழைப்பின் பலனை அபகரித்துக் கொண்டு, அவர்கள் ‘சாறு’ பிழியப்பட்ட சக்கைகளாக தூக்கி எறியப்பட்டு வருகிறார்கள்.

பெரும் பணக்காரர்களுக்கு வரியை குறைத்தால் அதன் பலன் அடிமட்டத்தில் இருப்பவர்களுக்கு போய் சேரும் என்று அரசு கூறுவது பெரும் அப்பட்டமான பொய் என்று ஆக்ஸ்பார்ம் அறிக்கை ஆதாரங்களுடன் நிரூபிக்கிறது.

பெரும் பணக்காரர்களுக்கு இரண்டு சதவீத வரி விதித்தால், அதன் மூலம் நாட்டில் ஊட்டச்சத்து குறைவான மக்கள் அனைவருக்கும் அடுத்த மூன்று ஆண்டுகளுக்கு ஊட்டச்சத்து உணவளிக்க முடியும்.

அவர்களுக்கு ஒரு சதவீத வரி விதித்தால், அதன் மூலம் அனைத்து மக்களுக்குமான மருத்துவத் திட்டங்களை ஐந்தாண்டுகளுக்கு நிறைவேற்ற முடியும்.

மிக உயர் நிலையில் உள்ள வெறும் 10 பெருமுதலாளிகளுக்கு 5 சதவீத வரி விதித்தால், பள்ளியில் இருந்து இடையில் நின்றுபோகும் 15 கோடி குழந்தைகளுக்கு மீண்டும் கல்வி தர முடியும் என்று உலக பொருளாதாரம் குறித்து வெளிவந்துள்ள ஆக்ஸ்பாம் அறிக்கை கூறுகிறது.

ஆனால், கார்ப்பரேட்டுகளுக்கு வரிக்குறைப்பு, 40 லட்சம் கோடி ரூபாய் வங்கிக் கடன் ரத்து, சொத்து வரிகள் ரத்து என்ற திசையில் தான் மோடி அரசு தொடர்ந்து சென்று கொண்டிருக்கிறது. அதே சமயம் ஏழை எளிய மக்களை பாதிக்கும் மறைமுக வரி அதிகரித்துக் கொண்டே செல்கிறது.

மோடி அரசின் வெளியுறவுக் கொள்கை, இந்தியாவின் அண்டை நாடுகள் அனைத்தையும் பகைத்து எதிரிகள் ஆக்கி வைத்திருக்கிறது. அதே நேரத்தில் அமெரிக்காவுடனும் இஸ்ரேலுடனும் கொஞ்சிக் குலாவுகிறது.

இதுவரை 40 ஆயிரத்துக்கு மேற்பட்ட பாலஸ்தீனர்களையும், குழந்தைகளையும், பெண்களையும் கொன்று குவித்துள்ள இஸ்ரேலுக்கு ஆதரவு காட்டுகிறது. இஸ்ரேலில்

பணிபுரிந்து, இனவாத அரசுக்கு உதவுவதற்காக, இந்தியாவில் உள்ள ஆயிரக்கணக்கான தொழிலாளர்களை தேர்வு செய்து அங்கு அனுப்பிக் கொண்டிருக்கிறது. இந்த லட்சணத்தில் இந்தியர்களுக்கு வேலைவாய்ப்பு தருவதாக வெட்கமில்லாமல் பெருமை பேசி வருகிறது.

பயங்கரவாதத்துக்கு எதிரான போராட்டம் என்பது சமாதானத்தை விரும்புகிற அனைத்து சக்திகளோடும் இணைந்து மேற்கொள்ள வேண்டியதாகும். ஆனால் உண்மையிலேயே அதிபயங்கரவாத நாடான அமெரிக்காவின் நலன்களை காப்பாற்றுவதற்காக, அதனோடு கூட்டுச் சேரும் மோடியின் கொள்கை, “சமாதானத்தை” விரும்பும் நாடுகள் மற்றும் சக்திகளிடமிருந்து இந்தியாவை தனிமைப்படுத்தி இருக்கிறது.

ஜி 20 அமைப்புக்கான தலைவர் பதவி, ஆண்டுக்கு ஒரு முறை சுழற்சி முறையில் அந்த 20 நாடுகளிடையே மாறி வருவதாகும். அவ்வாறுதான் இந்தியாவுக்கு தலைமை பொறுப்பு வந்தது. ஏதோ உலகமே சேர்ந்து, “உம்மை விட்டால் எமக்கு தலைமை தாங்க யாருமே இல்லை” என்று மோடியை தேர்ந்தெடுத்ததாக படுகேவலமான பொய் பிரச்சாரத்தை பல கோடி ரூபாய்களை செலவழித்து மோடி அரசு மேற்கொண்டது.

நாட்டு மக்களின் பொது சொத்துக்களான பொதுத்துறை நிறுவனங்கள், கார்ப்பரேட்டுகளிடம் தொடர்ந்து விற்கப்பட்டு வருகின்றன. நாட்டை பாதுகாக்கும் இராணுவத்துக்கான டாங்குகள், பீரங்கிகள், ஆயுதங்கள், கருவிகள், உடைகள் ஆகியவற்றை தயாரித்து கொடுத்த பிரமாண்டமான பாதுகாப்புத்துறை தொழிற்சாலைகள் இப்போது கார்ப்பரேட்டுகள் கையில் அகப்பட்டுள்ளன. மேலும் இத்துறையில் 100 சதவீதம் அந்நிய நேரடி முதலீட்டோடு, தனியார் துறையும் அனுமதிக்கப்பட்டிருக்கிறது. அந்தத் தனியாரும் அரசுக்குச் சொந்தமான தொழிற்சாலைகளிலேயே தமது உற்பத்தியை செய்வார்கள் என்ற அதிர்ச்சிகரமான தகவலும் வந்துள்ளது.

இரயில்வே, வங்கிகள், காப்பீட்டு நிறுவனங்கள் போன்றவை படிப்படியாக வெளிநாட்டு உள்நாட்டு கார்ப்பரேட்டுகளுக்கு விற்கப்படுகின்றன. ஏர் இந்தியா நிறுவனம் அதன் 104 விமானங்களோடு அற்ப விலையில் டாட்டாவுக்கு விற்கப்பட்டு விட்டது.

‘மேக் இன் இந்தியா’, ‘தொழில் செய்வதை எளிமைப்படுத்துதல்’ உள்ளிட்ட பல பெயர்களில் உள்நாட்டு வெளிநாட்டு கார்ப்பரேட் கம்பெனிகளுக்கு எண்ணெய், இயற்கை எரிவாயு, காடுகள், கனிமச்சுரங்கங்கள் போன்ற இயற்கை வளங்களை கொள்ளை கொண்டு போவதற்கு நித்தம் அனுமதிக்கப்படுகிறது. சுற்றுச்சூழலைப் பாதுகாக்கும் சட்டங்கள் கட்டறுக்கப்பட்டன; அவைகள் அப்பட்டமாக மீறப்படுகின்றன.

மோடி அரசு வந்ததும் திட்டக்குழு கலைக்கப்பட்டது. அதனிடத்தில் “நிதி ஆயோக்” என்ற அமைப்பு திணிக்கப்பட்டது. அது கேந்திரமான பொதுத்துறை நிறுவனங்களை பங்கு விலக்கம் செய்யுமாறு பரிந்துரைக்கிறது. சர்வதேச நிதி மூலதன சக்திகள், இப்போது இந்திய பொருளாதாரத்தை தமது கட்டுப்பாட்டில் எடுத்துக்கொண்டு சாதாரண மக்கள் நலன்களை புறக்கணித்து வருகின்றன.

பத்தாண்டுகளுக்கு முன்பு பாஜக மோடி, விவசாயிகளின் வருமானம் இரட்டிப்பாக்கப்படும், விவசாயிகளுக்கு வழங்கப்படும் குறைந்தபட்ச ஆதரவு விலை உற்பத்திச் செலவைவிட 50 சதவீதம் அதிகமாக இருக்கும் என்று வாக்குறுதி தந்தார். கடனை தள்ளுபடி செய்வதில் மோடி விவசாயிகளுக்கு துரோகம் இழைத்துள்ளார்.

அது மட்டும் இல்லாமல் பன்னாட்டு கார்ப்பரேட் விவசாய நிறுவனங்கள் இந்தியாவின் விவசாயத்தை ஒட்டுமொத்தமாக கைப்பற்றி கொள்வதற்கு உதவியாக, மூன்று வேளாண் வணிக சட்டங்களை பாஜக மோடி அரசு கொண்டு வந்தது. இந்தச் சட்டங்களால் ஏற்படும் பேராபத்தை உணர்ந்த விவசாயிகள், அவைகளை திரும்பப் பெறவேண்டும் என வலியுறுத்தினார்கள். ஆனால் மோடி அரசு வேளாண் வணிக சட்டங்களில் ஒரு கமா, முற்றுப்புள்ளியைக் கூட மாற்ற முடியாது என்று ஆணவத்துடன் மறுத்து விட்டது.

ஆனால் டெல்லி தலைநகரின் நுழைவாயில்களில் இலட்சக்கணக்கில் கூடி அமர்ந்து விவசாயிகள் போராட்டம் நடத்தினார்கள். இந்தியாவின் தொழிற்சங்கங்கள், முற்போக்கு அமைப்புகள் அனைத்தும் அதற்கு ஆதரவு அளித்தன. கடும் வெயில், கொட்டும் மழை, இரத்தத்தை உறைய வைக்கும் குளிர், எல்லாவற்றுக்கும் மேலாக உயிர் ஆபத்தை விளைத்த கொரோனா நோய்த் தொற்றுப் பரவல் ஆகியவற்றையெல்லாம் கடந்து 16 மாதங்களுக்கு மேல் தமது போராட்டத்தை நடத்தினர். அதன் விளைவாக அந்தச் சட்டங்கள் முற்றிலுமாக திரும்பப் பெறப்பட்டன.

அப்போது மோடி அரசு ஏற்றுக்கொண்ட கோரிக்கைகளை ஓராண்டு கடந்தும் இன்னும் நிறைவேற்றவில்லை. வாக்குறுதியை நிறைவேற்று என ஆயிரக்கணக்கில் தலைநகருக்கு முறையிட புறப்பட்ட விவசாயிகளை மோடி அரசு நடத்திய விதம் கொடூரமானது. சாலைகளில் ஆணி பதித்தார்கள். அகழி வெட்டினார்கள். தடுப்பு அரண் கட்டினார்கள். தடியடி நடத்தினார்கள். கண்ணீர் புகை குண்டுகளை வீசினார்கள்.

பஞ்சாப், ஹரியானா எல்லையிலேயே விவசாயிகள் தடுத்து நிறுத்தப்பட்டுள்ளனர். ஆனாலும் விவசாயிகள் போராட்டம் தொடர்ந்து கொண்டிருக்கிறது.

ஆனால், அதே நேரத்தில் கொஞ்சம் கூட குற்ற உணர்வின்றி, விவசாயிகளின் பாதுகாவலன் மோடி தான் என்று, அதிதீவிர பிரச்சாரம் இந்தத் தேர்தலில் நடந்து கொண்டிருக்கிறது.

மோடி அரசு கார்ப்பரேட்டுகளுக்கு வரிகளை ரத்து செய்தது; தொழில் தொடங்க நிலங்களை அரசாங்கமே கையகப்படுத்தி கொடுத்தது. தொழில் தொடங்க வங்கிக் கடன் கொடுத்தது. பின்னர் கடனையும் தள்ளுபடி செய்து விட்டது.

அவையும் போதாதென, 150 ஆண்டு காலமாக தொழிலாளர்கள் போராடிப் பெற்றிருந்த வேலை பாதுகாப்பு, ஊதிய பாதுகாப்பு, சமூகப் பாதுகாப்பு ஆகியவற்றை உள்ளடக்கிய 44 சட்டங்களை மோடி அரசு ரத்து செய்தது. அவற்றிற்குப் பதிலாக நான்கு சட்டங்களை கொண்டு வந்திருக்கிறது.

எட்டு மணி நேர வேலை, குறைந்தபட்ச ஊதியம் சமூகப் பாதுகாப்பு, சங்கம் வைக்கும் உரிமை, கூட்டுப் பேரம் பேசும் உரிமை போன்றவை பறிக்கப்படுகின்றன. நிரந்தர தொழிலாளர்களே இனி இல்லை என்ற நிலை உருவாக்கப்பட்டுள்ளது. ஒப்பந்த முறை தொழிலாளர்கள் அமர்த்தப்படுவது எல்லா இடங்களிலும் நடைமுறையாகிவிட்டது.

ஒப்பந்த தொழிலாளர்களுக்கு கூட சில சட்ட உரிமைகள் உள்ளன என்பதால், “ஃபிக்ஸட் டைம் எம்ப்ளாய்மெண்ட்”, “அவுட்சோர்ஸிங்” போன்ற தொழிலாளர்களுக்கான உரிமை எவையும் இல்லாத அத்தக்கூலி முறை பரவலாக்கப்படுகிறது.

உலகிலேயே வேலை வாய்ப்பு கிடைக்காதவர்கள் இந்தியாவில் தான் அதிக எண்ணிக்கையில் உள்ளனர். கடந்த 50 ஆண்டுகளில் இல்லாத அளவுக்கு வேலையின்மை உச்சத்தை எட்டி யிருக்கிறது. ஆனால் வேடிக்கை என்னவெனில், மோடி ஆட்சிக்கு வரும் போது ஆண்டுக்கு இரண்டு கோடி பேருக்கு வேலை தருவேன் என்று வாக்களித்தது தான்! அதன்படி இந்தப் பத்து ஆண்டுகளில் 20 கோடி பேருக்கு வேலை கிடைத்திருக்க வேண்டும். ஆனால் ஏற்கனவே வேலையில் இருந்த 10 கோடி பேர் வெளியேற்றப்பட்டு வீட்டுக்கு அனுப்பப்பட்டு இருக்கிறார்கள் என்பதே உண்மையாகும்.

விவசாயத் தொழிலாளர்களுக்கு குறைந்தபட்ச ஊதியம் சமூகப் பாதுகாப்பு திட்டங்களைத் தர மோடி அரசு தயாராக இல்லை.

மோடி அரசு 100 நாள் வேலை திட்டம் என்று சொல்லப்படும் ''மகாத்மா காந்தி ஊரக வேலைவாய்ப்பு உறுதி திட்டத்திற்கு'' வழங்கப்படும் நிதியை தொடர்ச்சியாக குறைத்துக் கொண்டே வருகிறது. ஆண்டுக்கு 200 நாள் வேலை, நாளொன்றுக்கு குறைந்தபட்ச ஊதியம் ரூ.700/ மாத ஓய்வூதியம் போன்ற கோரிக்கைகள் பரிசீலனைக்கும் கூட எடுத்துக் கொள்ளப்படவில்லை.

கல்வியையும் சுகாதாரத்தையும் பேணி பாதுகாக்க வேண்டிய அரசாங்கம், அவற்றைப் படிப்படியாக தனியாரிடம் தந்து வருகிறது. ஆயுஷ்மான் பாரத் என்ற திட்டம் தனியார் காப்பீட்டு நிறுவனங்களுக்கும் தனியார் மருத்துவமனைகளுக்கும் அரசு நிதியை பிரித்து தருவதற்காக உருவாக்கப்பட்டுள்ளது.

மருந்து தயாரிக்கும் நிறுவனங்களிடமிருந்து பல கோடி ரூபாய்களை தேர்தல் நிதியாக பெற்றுக்கொண்டு, மருந்துகளின் விலையை உச்சத்துக்கு கொண்டு செல்ல மோடி அரசு உதவி செய்தது. அரசின் கட்டுப்பாட்டு வைக்கப்பட்டிருந்த 108 உயிர் காக்கும் மருந்துகள் இன்று தனியார் கைக்கு மாற்றப்பட்டு, சாமானிய மக்கள் பயன்படுத்த முடியாத அளவுக்கு விலை உயர்த்தப்பட்டுள்ளது.

சென்ற முறை பண மதிப்பு நீக்க (டீமானிட்டைசேஷன்) நடவடிக்கை இந்திய பொருளாதாரத்தை சீர்குலைத்தது. சிறு குறு தொழில்களை அழித்தது. கருப்பு பணத்தை குளிக்க முடியும் தீவிரவாத நடவடிக்கைகளை தடுக்க முடியும் என்று சொன்னதெல்லாம் பொய் என நிரூபணம் ஆகிவிட்டது. அந்தத் தோல்வி காரணமாக அன்று அச்சிடப்பட்ட 2000 ரூபாய் நோட்டுகளை அரசு திரும்ப பெற்றிருக்கிறது. ஆளும் வர்க்கம் தனது கருப்பு பணத்தை வெள்ளை பணமாக மாற்றிக் கொள்ளவே இது வழிவகை செய்தது.

விலைவாசியை சரிபாதியாகக் குறைப்போம் என்று தான் மோடி வாக்குறுதி தந்திருந்தார். ஆனால் இந்த பத்தாண்டு கால ஆட்சியில் விலைவாசி இரண்டு மடங்கு உயர்ந்துள்ளது. தமிழ்நாடு கேரளா தவிர்த்த மற்ற மாநிலங்களில் பொதுத்துறை விநியோகம் சீர்குலைந்து விட்டது.

வரலாறு காணாத அளவுக்கு வெகுவேகமாக பெட்ரோல் டீசலின் விலை உயர்த்தப்பட்டது. இது அனைத்து பொருள்களின் விலை உயர்வுக்கு காரணமாகிவிட்டது. விலை உயர்ந்துள்ள அதே சமயத்தில், தனிநபர் வருமானம் கீழிறங்கியது. இருதலைக்கொள்ளி எறும்பாக மக்கள் தத்தளிக்கின்றனர்.

குடியுரிமை திருத்தச் சட்டத்தை, தேர்தல் அறிவிப்புக்கு சில நாட்களுக்கு முன்பு அமலுக்கு கொண்டு வந்துள்ளது. இஸ்லாமியர்களை தனிமைப்படுத்தி, ஒடுக்கும் தீய எண்ணம் கொண்ட பாஜக அரசு, இதன் மூலம் மக்களைப் பிளவுபடுத்தும் வேகத்தை மேலும் அதிகரிக்கிறது.

தேர்தல் காய்ச்சலில் வெளியிடப்படும் விளம்பரங்கள் யாவும் 'மோடி கேரண்டி' பற்றியே பேசுகின்றன. என்டிஏ கூட்டணி கேரண்டி அல்லது குறைந்த பட்சம் பிஜேபி கேரண்டி என்றுகூட சொல்லப்படவில்லை. ஒற்றை மனிதனின் சர்வாதிகாரத்தை நோக்கி நாடு நகர்த்தப்படுகிறது.

## ஊழலின் கறுப்பு வரலாறு

ஆளுகின்ற பாஜக மோடி அரசானது ஊழலில் மூழ்கித் திளைக்கிறது. 2014–ல் தனது தேர்தல் அறிக்கையில் ஊழலை ஒழிப்பதாக வாக்குறுதி அளித்தது. ஆனால் தார்மீக ரீதியலும், அரசியல் ரீதியலும், ஒழுக்க ரீதியிலும் பாஜகவானது நிராகரிக்கப்பட்டுள்ளது. பிரதமர் மோடி தலைமையில் நம்ப முடியாத அளவுக்கு ஊழல் நடைபெறுகிறது.

ஆர்எஸ்எஸ்–சின் அரசியல் பிரிவான பாஜக முறைகேடாக செல்வத்தைக் குவித்துள்ளது. பாஜக தலைவர்களும், அவர்கள் குடும்பத்தினரும் நம்ப முடியாத எதிர்காலத்தை உருவாக்கியுள்ளனர். நரேந்திர மோடியின் கூட்டாளிகளான அதானியும், அம்பானியும் உலகின் மிகப் பெரும் பணக்காரர்களாக உருவாகியுள்ளனர். இந்தியாவில் ஊழலின் விகிதம் மலிந்துள்ளதாக, **Global Corruption Barometer of Transparency International** என்ற உலக அளவிலான குடிமைச் சமூகம் கூறுகிறது. இது மோடியால் உருவானதாகும்.

ஊழலைக் கட்டுப்படுத்துவதற்காக மக்களுக்கு வழங்கப்பட்டிருந்த எல்லா சட்டங்களும் மோடியால் வேண்டுமென்றே நீர்த்துப்போகச் செய்யப்பட்டன. தகவல் அறியும் உரிமைச் சட்டம் சாரத்தை இழந்து விட்டது. பாஜகவின் கடந்த எட்டு ஆண்டுகால ஆட்சியில், அரசிடம் தகவலையும், அதன் பொறுப்பு குறித்தும் கேள்வி கேட்டதற்காக, தகவல் அறியும் உரிமை ஆர்வலர்கள் 80 பேர் கொல்லப்பட்டனர். 2014–ல் ஐக்கிய முன்னணி அரசால் அறிமுகப்படுத்தப்பட்ட குடிமக்கள் சாசனம் குறை தீர்க்கும் மசோதாவை செயலிழக்கச் **(lapse)** செய்துவிட்டது. அதனை பாஜக அரசானது மீண்டும் கொண்டு வரவில்லை. இடித்துரைப்பாளர் சட்டம் 2014 **(Whistle Blowers Act)** என்பது ஊழல் குறித்து சொல்பவர்களுக்கு பாதுகாப்பு அளிக்க கொண்டுவரப்பட்டது. அது திருத்தப்பட்டு, புகார் அளிப்பவர்களை வெளிப்படுத்தும் வகையிலும், புகார் அளித்ததற்காக வழக்குத் தொடுக்கும் வகையிலும் மாற்றம் செய்யப்பட்டது. பாஜக கொண்டு வந்த திருத்தங்களால் லோக்பால் – லோகாயுதா சட்டம் 2014 அதிகாரம் இழந்து, அர்த்தமற்று போயுள்ளது.

ஊழலை சட்டப்படியானதாக்க, பாஜகவானது நாடாளுமன்ற நெறிமுறைகளை முறைகேடாக பயன்படுத்தியது. கம்பெனிகள் சட்டம், வருமான வரிச் சட்டம், **FCNR** சட்டம், சிறப்பு பொருளாதார மண்டலச் சட்டம் போன்றவை கம்பெனிகளுக்கு ஆதரவாக திருத்தப்பட்டு, கொள்ளையில் பங்கு பெறும் ஆட்சியாக மாறியுள்ளது. புதிய திட்டங்களும்

பரஸ்பரம் ஆதாயம் பெறும் வகையில் உருவாக்கப்படுகின்றன. தவறிழைப்பதில் எல்லாவித நெறிமுறைகளையும் மீறிவிட்டது. முன்னெப்போதும் இல்லாத வகையில் ஊழலில் ஒரு கறுப்பு வரலாற்றை மோடி அரசு உருவாக்கியுள்ளது.

தேர்தல் பத்திர விவகாரத்தில் பாஜகவின் முகத்திரை கிழிந்து விட்டது. அதன் அசிங்க நடைமுறை அம்பலமாகியுள்ளது. தேர்தல் பத்திரங்கள் திட்டம் அரசியலமைப்புக்கு விரோதமானது என உச்சநீதிமன்றம் அதனை ரத்து செய்து விட்டது.

பாரத ஸ்டேட் வங்கி, தேர்தல் பத்திர விவரங்களை கொடுப்பதை தவிர்க்க பெருமளவு முயற்சி எடுத்தும், உச்சநீதிமன்றம் உறுதி காட்டியதால் வேறு வழியின்றி இப்போது கொடுத்துள்ளது. இதில் 57 சதவீதம் தேர்தல் பத்திரங்களை பாஜக பெற்றுள்ளது.

நாடாளுமன்ற நெறிமுறைகளை மீறி, பிரதமரால் இது அறிவிக்கப்பட்ட திட்டமாகும். நன்கொடை அளித்தது யார், பயன்பெற்றது யார் என்ற விவரங்களை மறைப்பதற்காக வருமான வரிச் சட்டமும், கம்பெனி சட்டமும் திருத்தப்பட்டன. பாஜகவின் முகத்திரை கிழிந்துள்ளது. மோடி இன்று அம்பலப்பட்டுள்ளார்.

அரசாங்கத் திட்டங்களை அமலாக்குவதில் ஊழல் இருப்பதாக, மத்திய தலைமைக் கணக்குத் தணிக்கையாளர் **(CAG)** 2023–ம் ஆண்டு அறிக்கையில் சுட்டிக்காட்டியுள்ளார். ரூபாய் 7.5 இலட்சம் கோடி அளவுக்கு ஊழல் நடந்துள்ளது. இந்தியச் சாலை திட்டம் **(PM - JAY),** ஹிந்துஸ்தான் ஏரோனாடிக்ஸ் நிறுவனம் தயாரித்த பிழையான இயந்திரம், பிரதம மந்திரி (ஸ்வாச் பாரத்) சுகாதாரத் திட்டம், சிறுபான்மையினருக்கான உதவித்தொகை திட்டங்கள், தேசிய நெடுஞ்சாலையில் வசூலிக்கப்படும் சுங்கக் கட்டணம் போன்றவைகளில் நடந்துள்ள ஊழல்களை மத்திய தலைமைக் கணக்கு தணிக்கையாளர் **(CAG)** வெளிப்படுத்தியுள்ளார். இப்படிப்பட்ட ஊழல் குறித்து நாடாளுமன்றத்தில் விவாதிக்க வேண்டும் என எதிர்கட்சிகள் கோரியபோதும் பாஜக அரசு அனுமதிக்கவில்லை. ஊழலை வெளிப்படுத்தும் அறிக்கையை தயாரித்த மூன்று அதிகாரிகள் மிரட்டப்பட்டு, இடமாற்றம் செய்யப்பட்டனர்.

ரஃபேல் விமானங்கள் வாங்கியதில் 21 ஆயிரத்து 75 கோடி ரூபாய்க்கு ஊழல் நடைபெற்றுள்ளது. அரசாங்கத்திற்கு ஏற்பட்ட இழப்பானது அனில் அம்பானிக்கு இலாபமாக மாறியுள்ளது. இதனை நரேந்திர மோடி செய்திருக்கிறார். ரஃபேல் போர் விமானங்களை பிரான்சைச் சேர்ந்த தசால்ட் விமான நிறுவனத்திடமிருந்தும், அனில் அம்பானியின் ரிலையன்சிடமிருந்தும் வாங்க மோடிதான் காரணமாக இருந்ததாக சொல்லப்படுகிறது. இந்த ஒப்பந்தத்தில் இருந்த இரகசிய விபரங்கள் பிரான்ஸ் நாட்டில் வெளியானது. அதில் ‘‘ஊழல்’’ ‘‘செல்வாக்கு காட்டப்பட்டது’’ ‘‘பண மோசடி’’ **(money laundering),** ‘‘பாரபட்சம்‘‘ ‘‘அதீத வரிக்குறைப்பு’’ போன்றவை இந்த விமானங்கள் வாங்கப்பட்ட போது நடந்தன என்று தெரிவிக்கப்பட்டது. இதுகுறித்து விசாரிக்க பிரான்ஸ் ஒரு நீதிபதியை நியமித்தது. இந்த விசாரணைக்கு இந்தியா ஒத்துழைக்கவில்லை என பிரான்ஸ் அதிகாரிகள் புகார் தெரிவித்தனர்.

அதானி குழுமம் செய்த முறையற்ற பங்குக் கணக்கீடுகள் பற்றி ஹிடன்பர்க் அறிக்கை கூறியுள்ளது. அதானி குழுமத்தின் இலாபமானது உயர்த்திக் காட்டப்பட்டு, நட்டமானது குறைத்து காட்டப்பட்டுள்ளது. ஆயுள் காப்பீட்டு நிறுவனம் **(LIC)** ரூ.56 ஆயிரத்து 142

கோடிகளை அதானி நிறுவனப் பங்குகளில் முதலீடு செய்துள்ளது; பாரத ஸ்டேட் வங்கியானது ரூ.38 ஆயிரத்து 150 கோடிகளை கடனாக கொடுத்துள்ளது; வருங்கால வைப்பு நிதி அமைப்பானது **(EPFO)** ரூ.1 இலட்சத்து 65 ஆயிரம் கோடிகளை அதானி துறைமுகத்திலும், அதானி எண்டர்பிரைசிலும் முதலீடு செய்துள்ளது. இவையெல்லாம் மக்களின் வரிப் பணமாகும். முறைகேடுகளை செபி அமைப்பானது கண்டுகொள்ளவில்லை. உச்சநீதிமன்றம் விவரங்களை கேட்டது. எதிர்கட்சிகள் நாடாளுமன்ற கூட்டுக்குழு விசாரணை கோரின. மோடி வெட்கமில்லாமல் அமைதியாக இருந்தார். அவருடைய நண்பரான அதானி நலமாகவும், மகிழ்ச்சியாகவும் இருக்கிறார். அவர் மேலும் பணக்காரராகி வருகிறார்.

கொரோனா காலத்தில் உருவாக்கப்பட்ட பிஎம் கேர்ஸ் நிதியில் ஊழல் நடந்துள்ளது. ரூ.12 ஆயிரத்து 700 கோடிகள் மூன்று ஆண்டு காலத்தில் வசூலிக்கப்பட்டுள்ளன. தணிக்கை செய்யப்பட்ட அறிக்கையின்படி 5 ஆயிரத்து 516 கோடி ரூபாய்கள் இன்னமும் பயன்படுத்தப்படாமல் உள்ளது. மத்திய தலைமைக் கணக்கு தணிக்கையாளர் சொல்வது போல இது தனியார் நிதியாகும். எனவே இதனை தணிக்கை செய்ய இயலாது. தகவல் அறியும் உரிமைச் சட்டத்திற்கும் கட்டுப்படாது. நிதி குறித்த விவரம் பொதுமக்களுக்கு தெரிவிக்கப்படவில்லை. நாடாளுமன்றம் விவாதிக்கவில்லை. வெளிப்படைத் தன்மை கடுகளவும் இல்லை. இரகசியமகவும், தணிக்கைக்கு உட்படாமலும் இருப்பதால், இந்தத் தொகையானது பாஜக தேர்தலுக்காக செலவழிக்கப்பட்டிருக்கலாம்.

2015–2023 காலக்கட்டத்தில் 14.56 இலட்சம் கோடி ரூபாய் வாராக்கடனாக வங்கிகளால் தள்ளுபடி செய்துள்ளதை நாடாளுமன்றத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இவை அனைத்தும் கார்ப்பரேட்டுகளுக்கு கொடுத்தவை. இது வழக்கமான வங்கி நடைமுறை அல்ல. மோடி அரசின் உதவியோடு கார்பரேட் நிறுவனங்கள் பகிரங்கமாக நடத்தியுள்ள சட்டப்பூர்வமான கொள்ளையாகும்.

இவையெல்லாம் அடையாளமான ஊழல்களே. பாஜகவானது கார்ப்பரேட் நிறுவனங்களுக்கு தனது அதிகாரத்தை முறைகேடாக பயன்படுத்தி சலுகை செய்துள்ளது. அதனால் பாஜக இலாபம் ஈட்டியுள்ளது. அதானி முந்த்ரா, எஸ்ஸார் சாலயா நொடித்துப் போகும் நிலையில் இருந்தன. அவை பாஜகவின் தலையீட்டினால் காப்பாற்றப்பட்டுள்ளன. ஜார்க்கண்ட் மாநில சட்ட திருத்தத்தின் மூலம் கோடா துறைமுகம் விற்கப்பட்டுள்ளது. சிறப்பு பொருளாதார மண்டல சட்டமானது அதானி மின் குழுமம் இலாபம் அடையும் வகையில் 2016–ல் திருத்தப்பட்டது. இவையெல்லாம் கற்பனைக்கு எட்டாத ஊழலைப் பற்றிய உதாரணங்களாகும். கார்ப்பரேட்டுகளுக்கும், அரசாங்கத்திற்கும் இடையிலான உறவுக்கு கையூட்டு பணம் பயன்படுகிறது. இவை சலுகைசார் முதலாளித்துவ **(Crony Capitalism)** உறவுக்கான சிறந்த உதாரணமாகும். இது அபாயகரமானது.

மேலும் பல ஊழல்கள் இன்னமும் உள்ளன. அவை வெளிவரத் தொடங்கியுள்ளன. ஊழலானது வறுமையை ஆழமாக்குகிறது. மனித மாண்பையும், மனித உரிமையையும் சிதைக்கிறது. வளர்ச்சியை தடம்புரளச் செய்கிறது. ஜனநாயகத்தின் மீதான நம்பிக்கையை அழிக்கிறது. பாஜக மோடி அரசு ஊழல் புதை சேற்றில் உருண்டு மகிழ்கிறது. அது அரசாளும் தார்மீக உரிமையை முற்றிலுமாக இழந்துவிட்டது.

முடிவெடுக்கும் அதிகார மையம் ஒவ்வொன்றிலும் மக்கள் பங்கேற்பையும், கண்காணிப்பையும் உறுதி செய்யும் ஜனநாயக நடைமுறைகளும், நெறிமுறைகளும் மீட்கப்பட வேண்டும்.

தேர்தல் அறிவித்த பின்பு டில்லி முதல்வர் கேஜ்ரிவால் சிறையிலடைக்கப்பட்டார். வேறு கட்சிகளைச் சார்ந்தவர்களை அரசு அதிகாரம், அமலாக்கத்துறை ஆகியவற்றால் மிரட்டி பிஜேபி தனது கட்சியில் சேர்க்கிறது. அடி பணிய மறுத்த எதிர்க்கட்சித் தலைவர்களை எல்லாம் சிறையில் அடைத்துள்ளது.

ஜெர்மனியில் சர்வாதிகாரத்தைக் கைப்பற்றும் முன்பு நடந்த பொதுத்தேர்தலில் ஹிட்லர் இதே போலத்தான் எதிர்க்குரல்களை எல்லாம் அடக்கி ஒடுக்கி வென்றார். அதற்குப் பின்பு ஜெர்மனியில் ஏற்பட்ட நிலை, இந்தியாவிலும் ஏற்பட்டு விடாமல் தடுக்க வேண்டியது இந்திய வாக்காளர்களின் கடமையாகும்.

**பாஜக அரசு பெரும் தோல்விகளை சந்தித்து கொண்டிருக்கும் இந்த பின்னணியில் 18–வது மக்களவைக்கான பொது தேர்தல் நடைபெறுகிறது. நாட்டில் பல்வேறு முக்கியமான பிரச்சனைகளில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் நிலைபாட்டை மக்கள் முன்பு வைக்கிறோம்.**

கீழே கொடுக்கப்பட்டுள்ள கோரிக்கை சாசனத்தின் அடிப்படையில், நாடாளுமன்றத்திற்கு உள்ளேயும் வெளியேயும் மக்களுக்கான போராட்டத்தை நடத்தும் என்று இந்திய கம்யூனிஸ்ட் கட்சி உறுதி கூறுகிறது.

## இந்திய விவசாயிகள் நிலையை மேம்படுத்த

★ விவசாயிகளின் டெல்லி முற்றுகையின்போது மோடி அரசு உறுதியளித்து, நிறைவேற்ற தவறிய அனைத்து வாக்குறுதிகளையும் நிறைவேற்றுதல் மற்றும் எம்.எஸ்.சாமிநாதன் குழு பரிந்துரைகளை முழுமையாக அமலாக்குதல்

★ அனைத்து விவசாய விளைபொருட்களுக்கும் இலாப விலை வழங்க வழங்கப்படுவதை சட்டபூர்வமாக உறுதி செய்தல், விளைச்சலுக்காக உற்பத்தி செலவைவிட குறைந்தபட்சம் 50 சதவீதம் கூடுதல் விலை நிர்ணயம் செய்தல், விரிவான பரவலான கொள்முதலை மேற்கொள்ளுதல்

★ விரிவடைந்த முழுமையான விவசாய கடன் தள்ளுபடி, தேசிய கடன் நிவாரண ஆணையம் உருவாக்குதல், பேரிடர் நேரங்களில் துயருற்றவர்களுக்கு காலம் தாழ்த்தாது முழுத் திறனுடன் நிவாரண பணிகளை செய்தல்

★ விவசாய இடுபொருள்களை உற்பத்தி செய்யும் தொழிற்சாலைகளை ஒழுங்கு படுத்தியோ அல்லது நேரடியான மானியத்தை விவசாயிகளுக்கு வழங்கியோ விவசாய இடுபொருள்களின் விலைகளை குறைத்தல்

★ அனைத்து பயிர்களுக்கும் உள்ளடங்கிய பயிர் காப்பீட்டு திட்டத்தை உருவாக்குதல் காலதாமதம் இன்றி இழப்பீடு வழங்குதல்

★ இந்திய விவசாயத்தில் ஏற்பட்டுள்ள நெருக்கடிகளைப் பற்றி நாடாளுமன்றத்தில் தனி அமர்வு நடத்தி, விவாதித்து தீர்வு காணுதல்

★ 60 வயதான விவசாயிகள், விவசாய தொழிலாளர்கள், கைவினைஞர்களுக்கு ஓய்வூதியம் வழங்க வேண்டிய உள்ளிட்ட அனைத்து விவசாய குடும்பங்களுக்காக விரிந்த சமூக பாதுகாப்பு வழங்குதல்

★ விவசாயத் தொழிலாளர்களுக்கு தனி மத்திய சட்டம் இயற்றுதல், தமிழ்நாட்டில் உள்ளது போலவே விவசாயத்திற்கு தனி நிதிநிலை அமைப்பு நிதிநிலை அறிக்கை சமர்ப்பித்தல்

★ நாடாளுமன்றத்தில் விவசாயம் குறித்தும் அதன் நெருக்கடிகளைப் பற்றியும் தனி அமர்வுகள் நடத்தி விவாதித்தல்.

★ 60 வயதான விவசாயிகள், விவசாயத் தொழிலாளர்கள், கைவினைஞர்களுக்கு ஓய்வூதியம் வழங்குவது உள்ளிட்ட அனைத்து விவசாய குடும்பங்களுக்குமான விரிந்த சமூகப் பாதுகாப்பு வழங்குதல்.

★ விவசாயப் பொருட்களை பொதுத்துறை நிறுவனங்கள் மூலம் சேமித்தல், பொது விநியோகத் திட்டத்தை ஊக்குவித்தல்.

★ அத்தியாவசிய பொருட்களை ஊக வணிகத்தில் ஈடுபடுத்துவதைத் தடை செய்தல்.

★ மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் ஒரு குடும்பத்திற்கு 200 நாட்கள் வேலை, குறிப்பிட்ட காலத்திற்குள் சம்பளம் வழங்குவது சட்டத்தின்படி உறுதி செய்தல்,வயலில் பணிபுரியும் அன்ஸ்கில்டு தொழிலாளர்களின் குறைந்தபட்ச ஊதியத்திற்கு இணையான தொகையை, சம்பளமாக வழங்குதல்.

★ கால்நடைகளை விற்பனை செய்வதில் உள்ள, சட்டப்பூர்வமான தடைகளாலும், பசுப் பாதுகாவலர்கள் என்று சொல்லிக் கொள்பவர் மூலமும் உருவாக்கப்பட்டுள்ள இடர்பாடுகளைக் களைதல்; சுற்றித் திரியும் கால்நடைகளால் வயல்களில் ஏற்படும் பாதிப்புக்கு நட்டஈடு தருதல்.

★ விவசாயிகள் அனுமதி இல்லாமல் நிலத்தை கையகப்படுத்துவதை நிறுத்துதல். வணிகத்திற்காக நிலத்தை கையகப்படுத்துவதையும், மாற்றித் தருவதையும் தடுத்தல், 2013ஆம் ஆண்டு இயற்றப்பட்ட நிலத்தை கையகப்படுத்துவது தொடர்பான சட்டத்தை **(The Right to Fair Compensation and Transparency in Land acquisition, Rehabilitation and Resettlement Act, 2013)** வலுவிழக்க செய்யும் முயற்சிகளை உறுதியுடன் தடுத்தல், விவசாய நிலங்களைப் பாதுகாக்கவும், நிலப் பயன்பாட்டை ஒழுங்குபடுத்தவும் புதிய கொள்கை உருவாக்குதல்.

★ நிலமற்றவர்களுக்கு நிலம் ஒதுக்கீடு செய்து பட்டா வழங்குதல், மீன் பிடிக்கும் உரிமையை சட்டபூர்வமாக அங்கீகரித்தல், தமது தேவைகளுக்காக மணல் அள்ளுவது மண் எடுப்பது ஆகியவற்றை அங்கீகரித்தல், பாரம்பரியமான மேய்ச்சல் நிலங்களை பயன்படுத்த செய்யப்பட்டுள்ள தடைகளை அகற்றுதல் ஆகியவற்றின் மூலம் வாழ்வுரிமையையும் உறுதி செய்தல்.

★ பால்பண்ணைகள் மூலம் பாலைக் கொள்முதல் செய்து, பால் உற்பத்தியாளர்களுக்கு லாப விலை தருதல், மதிய உணவு திட்டம், ஒருங்கிணைந்த ஊட்டச்சத்து மையம் போன்றவை மூலம் பால் வழங்கி குழந்தைகளின் ஊட்டச்சத்து பாதுகாப்பை உறுதி செய்தல்.

★ 2018 ஆண்டின், ஒப்பந்த விவசாய சட்டத்தை **(Contract farming Act 2018)** மறுபரிசீலனை செய்து, இச்சட்டத்தின் மூலம் கார்ப்பரேட் நிறுவனங்கள் கொள்ளை அடிப்படைத் தடுத்து, விவசாயிகளைப் பாதுகாத்தல்.

★ பெருவணிகப் பேரங்களால், விவசாயிகளுக்கு விரோதமான கொள்கைகளை உருவாக்குவதை அகற்றுதல், விவசாயம் சம்மந்தப்பட்ட **RECB** போன்ற சுதந்திர வணிக ஒப்பந்தங்களை நீக்குதல்.

★ நில உச்சவரம்பு சட்டத்தை அமலாக்குதல், உபரி நிலங்கள் நிலமற்ற ஏழைகளுக்கும், தலித்துகளுக்கும் வழங்குதல். நில பட்டா உரிமை பெண்களுக்கும், பெண் வாரிசுகளுக்கும் பெயர்மாற்றம் செய்வதையும் உறுதி செய்தல்.

★ விவசாய நிலங்கள் அபாயகரமான வேகத்துடன் குறைந்து வருவதைத் தடுத்துப் பாதுகாக்கத் தனியாக விவசாய மண்டலங்கள் அறிவித்தல்.

## இளைஞர்களும் வேலையின்மையும்

★ அரசியலமைப்புச் சட்டத்தைத் திருத்தி, வேலை செய்யும் உரிமையை அடிப்படை உரிமையாக்குதல்

★ அனைவருக்குமான, பகத்சிங் தேசிய வேலை உறுதிச் சட்டம் **(BNEGA)** இயற்றுதல்.

★ சமூகப் பாதுகாப்புத்திட்டத்தின் ஒரு பகுதியாக, வேலையற்ற இளைஞர்களுக்கு வேலையற்றோருக்கான நிவாரணம் வழங்குதல்.

★ அதிகத் தொழிலாளர்களை வேலையில் ஈடுபடுத்தும் ஆலைகளை ஊக்குவித்து, அதன் மூலம் வேலையின்மையைக் குறைத்தல்.

★ அனைத்து துறைகளிலும் உள்ள காலியிடங்களை நிரப்புதல்.

★ இளைஞர்களின் ஒட்டுமொத்த முன்னேற்றத்தை உறுதி செய்ய 'தேசிய இளைஞர் கொள்கை' உருவாக்குதல்.

★ விளையாட்டுகளில் எல்லா இளைஞர்களுக்கும் சமமான வாய்ப்பை உறுதி செய்தல், அனைத்து கல்வி நிறுவனங்களிலும் விளையாடுவதற்கான கட்டமைப்புகளை மேம்படுத்துதல்.

★ வளங்களைத் திரட்டி, வருமானத்தை உருவாக்க வேண்டிய அரசின் கடமையை உணர்ந்து, வளர்ந்து வரும் பொருளாதார சமமின்மையைக் கணக்கில் கொண்டு, நகர்ப்புற சொத்துகளுக்கும் செல்வங்களுக்கும் உச்சவரம்பு கொண்டு வருவதற்கான வாய்ப்பை ஆய்வு செய்தல்.

## தொழிலாளர் கோரிக்கைகள்

★ தொழிலாளர்களின் உரிமைகளை பறிக்கும் வகையிலும், கார்ப்பரேட்டுகளுக்கு சாதகமாகவும், பிஜேபி அரசு வெளியிட்ட நான்கு தொழிலாளர் சட்ட தொகுப்புகளை ரத்து செய்தல்

★ 15-வது இந்தியத் தொழிலாளர் மாநாட்டு பரிந்துரை மற்றும் உச்ச நீதிமன்ற தீர்ப்பின்படி தேசிய குறைந்தபட்ச ஊதியத்தை ரூ. 26 ஆயிரமாக நிர்ணயம் செய்தல்.

★ அனைத்து தொழிலாளர்களுக்கும் மாதம் 9000 ரூபாய்க்கு குறையாத ஓய்வூதியம், அகவிலைப்படியோடு சேர்த்து உறுதிசெய்தல்.

★ புதிய ஓய்வூதியத் திட்டத்தை மாற்றி, பழைய ஓய்வூதியத் திட்டத்தை மீண்டும் கொண்டுவருதல்.

★ தொடர்ச்சியும் நிரந்தரத் தன்மையும் கொண்ட பணியிடங்களை ஒப்பந்த அடிப்படையில் விடுவதைத் தடை செய்தல், அதுவரையில் நிரந்தர தொழிலாளர்கள் செய்யும் அதே வேலையைச் செய்யும் ஒப்பந்த தொழிலாளர்களுக்கு நிரந்தரத் தொழிலாளியின் சம்பளம், இதர நலன்களுக்கு இணையான ஊதியத்தை, சம வேலைக்கு சம ஊதியத்தை வழங்குதல்.

★ நிரந்தர தன்மையும் தொடர்ச்சியும் உள்ள வேலைகளை வெளியிடங்களில் தந்து அல்லது வெளியாட்களைக் கொண்டு அவுட்சோர்சிங் செய்வதை நிறுத்துதல்.

★ இந்திய அரசியல் சாசனம் வழிகாட்டும் வகையில் ஒரே வேலையை செய்யும் ஆணுக்கும். பெண்ணுக்கும் ஒரே சம்பளத்தை வழங்குவதை உறுதி செய்தல்.

★ அரசுகளின் பல்வேறு நலத்திட்டங்களில் பணிபுரியும் திட்டஊழியர்களை தொழிலாளர்கள் என அங்கீகரித்தல்

★ அங்கன்வாடி ஊழியர்கள், உதவியாளர்கள், ஆஷா திட்ட ஊழியர்கள், தேசிய சுகாதார திட்டங்களில், குழந்தைத் தொழிலாளர் திட்டங்களில் பணிபுரிவோர், கிராம சேவகர்கள், ஆகியவர்களுக்கு குறைந்த பட்ச ஊதியம், சமூகப் பாதுகாப்பு, ஓய்வூதியம் ஆகியன வழங்குதல்.

★ குறித்தகால வேலைநியமனம் என்ற பிக்சட் டெர்ம் எம்ப்ளாய்மெண்ட் முறையை உடனடியாக ரத்து செய்தல்.

★ எந்த விதி விலக்கும் தராமல், சிறப்பு பொருளாதார மண்டலங்களில் தொழிலாளர் நலச் சட்டங்களை உறுதியோடு அமலாக்குதல்.

★ பொதுத்துறை தொழிலாளர்களுக்கு குறித்த கால இடைவெளியில், காரணங்களை கூறி காலதாமதப்படுத்தாமல், சம்பளம், படிகளை உயர்த்துவதை உறுதி செய்தல்..

★ வீட்டுவேலை செய்யும் தொழிலாளர்களைப் பாதுகாக்க, தனியான மத்தியச் சட்டம் கொண்டு வருதல்.

★ தொழிலாளர் சட்டங்களின் பிரிவுகளைச் சரியாக அமலாக்கி, தவறு இழைப்பவர்களைத் தண்டிப்பதன் மூலம் அமைப்புசாராத, பாதுகாப்பற்ற தொழிலாளர்கள் பாதுகாத்தல், செங்கல்

சூளைகளில் பணிபுரியும் பெண்கள், குழந்தைகள், குடும்பங்களை பாதுகாக்கும் வகையில் 1976 ஆண்டு நிறைவேற்றப்பட்ட சட்டப்படி உறுதியான நடவடிக்கை எடுத்தல்.

★ தெரு வியாபாரிகள், இடம் பெயர்ந்த தொழிலாளர்களின் பிரச்சினைகளை ஆய்வு செய்தல், இதற்கான மத்திய சட்டம் செயல்படாமல் இருக்கும் நிலையை மாற்றி, அமல்படுத்தி அவர்களைப் பாதுகாத்தல்.

★ கட்டுமான தொழிலாளர் மற்றும் உடல் உழைப்பு தொழிலாளர் நல வாரியங்களின் செயல்பாட்டை மேம்படுத்தவும், பதிவு மற்றும் நிதி பலன்களைப் பெறும் முறைகளை எளிமைப்படுத்தவும், நிதி பலன்களை தேவைக்கேற்ப அதிகப்படுத்தவும் உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல். ஏழைக் குடும்பங்களுக்கு கண்ணியமான வாழ்வை உறுதி செய்யும் வகையில் குறைந்த பட்ச ஊக்கத் தொகையை உறுதி செய்யும் வறுமை ஒழிப்புத் திட்டங்களை பெருமளவில் உருவாக்குதல். தற்போது உள்ள சமூகப் பாதுகாப்புத் திட்டங்களை வலுப்படுத்துதல்,

## பெண்களும், பாலின நீதியும்

★ பெண்களுக்கு எதிரான குற்றங்களை தடுப்பதற்கான நிறுவனங்களுக்கு உரிய நிதி ஒதுக்கீடு செய்து பலப்படுத்துதல், பெண்களுக்கு ஆதரவான சட்டங்கள் சரியாக அமல்படுத்துதல், கண்காணித்தல்.

★ பெண்களுக்கு எதிரான குற்றங்கள் குறித்த எல்லா வழக்குகளையும் குறிப்பிட்ட காலத்திற்குள் முடிவுக்கு வரும் வகையில் நீதிமன்றங்கள், விரைவு நீதி மன்றங்களின் எண்ணிக்கையை அதிகமாக்குதல்.

★ ஆணவக் கொலைகளைத் தடுக்கவும், பெண்களுக்கு எதிரான சீண்டல்களுக்கு எதிராகவும், கட்டப் பஞ்சாயத்து போன்ற சட்டவிரோத அமைப்புகளுக்கு எதிராகவும் சட்டங்களைக் கடுமையாக்குதல்.

★ மூன்றாம் பாலினத்தவர் சம உரிமை பெறும்வகையில் சட்டங்கள் இயற்றுதல், ஒருபாலின குழுவினருக்கு போதுமான சமூக ஆதரவும், பொருளாதார ஆதரவும் அளித்தல், தனியாக இருக்கும் பெண்கள், கைவிடப்பட்ட பெண்கள், விதவைகள், கணவர் உயிருடன் இருக்கிறாரா எனத்தெரியாத (குறிப்பாக காஷ்மீரில்) நிலையில் இருப்போர் ஆகியோருக்கு சட்டப்பூர்வமான ஆதரவும், பொருளாதார ஆதரவும் வழங்குதல்.

★ வேலை வாய்ப்பில் 33 சதம் பெண்களுக்கு கிடைத்திட சட்டம் இயற்றுதல்.

★ நாடாளுமன்றத்திலும், சட்டமன்றத்திலும் பெண்களுக்கு 33சத இட ஒதுக்கீடு சட்டத்தை நாடாளுமன்றத்தில் நிறைவேற்றி இருந்தாலும், செயல்படுத்தும் காலம் தள்ளிப் போடப்பட்டுள்ளது. இனியும் வேறு தடங்கல்கள் எழாமல், செயலுக்குக் கொண்டு வருதல்

★ எல்லாவிதமான மூன்றடுக்கு பஞ்சாயத்து நிறுவனங்களிலும் பெண்களுக்கு 50 சத இட ஒதுக்கீட்டை நாடுமுழுதும் விரிவுபடுத்துதல்.

★ உள்ளாட்சி நிறுவனங்களில் தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் பிரதிநிதிகளுக்கு சம்பளம், படிகள் வழங்கிட சட்டம் இயற்றுதல்.

★ தேசிய,மாநில மகளிர் ஆணையங்களின் சுயேச்சையான செயல்பாட்டை உறுதி செய்தல்.

★ பெற்றோரிடமிருந்தும், திருமண உறவின் வழியாகவும் பெண்களுக்கும் சமமான சொத்துரிமை கிடைக்க வழிவகை செய்தல்.

★ அரசாங்க வீட்டுவசதி திட்டங்களில் பழங்குடி, தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட பிரிவினைச் சார்ந்த பெண்கள், குடும்ப தலைவிகள், கைம்பெண்கள், வீடற்றவர்கள், வயதானவர்கள், கைவிடப் பட்டோர், பாலியல் வன்முறை மற்றும் அமில தாக்குதல்களில் உயிர்பிழைத்தவர்களுக்கு முன்னுரிமை வழங்குதல்.

★ தற்கொலையால் பாதிக்கப்பட்ட விவசாயக் குடும்பத்துப் பெண்களை ஆதரித்துப் பாதுகாப்பதற்கான விரிவான கொள்கை வகுத்தல்.

★ கிராமப்புறத்தில் இருக்கும் பெண்களை விவசாயிகளாக அங்கீகரித்து அவர்களுக்கு விவசாயிகளுக்கு உரிய எல்லா ஆதரவும் தருதல்.

★ வீடுகளைச் சார்ந்து பணிபுரியும் பெண்கள் உட்பட அனைத்துப் பெண் தொழிலாளர்களுக்கும் குறைந்த பட்ச ஊதியம் அமலாவதை உறுதி செய்தல்.

★ எந்த சமூகப் பாதுகாப்புத் திட்டத்துக்கும் ஆதார் அட்டை தேவையில்லை என விலக்கி வைத்தல்.

★ மகப்பேறு உதவிச் சட்டத்தை அனைவருக்கும் விரிவுபடுத்துதல்.

★ நபார்டு வங்கியைப் போன்ற பெண்களுக்கான ஒரு வங்கி தேசிய அளவில் நிறுவி, அதன்மூலம் சுய உதவிக் குழுக்களுக்கும், பெண்களால் நடத்தப்படும் சிறு நிறுவனங்களுக்கும் தடையற்ற நிதி வழங்குதல்.

★ எல்லா தேசிய ஆணையங்களிலும் 33 சத இட ஒதுக்கீடு பெண்களுக்கு வழங்குதல்.

★ சர்வதேச உழைக்கும் பெண்கள் தினமான மார்ச் 8ம் தேதியை, பாலினக் கணக்கு மீளாய்வு **(Gender Budget Review)** நாளாகக் கருதி, பெண்கள் நிலையை ஒவ்வோராண்டும் நமது நாடாளுமன்ற கூட்ட அமர்வில் பரிசீலித்தல்.

★ உரிமைகள் தொடர்பான சட்டங்கள் அமலாவதைக் கண்காணிக்க அதிகாரமிக்க ஆணையம் நிறுவுதல்.

## குழந்தைகள்

★ எல்லாவிதமான ஊட்டச்சத்துக் குறைபாடுகளையும் முடிவுக்கு கொண்டு வருதல். குழந்தைகள், வளரிளம் பெண்கள், கர்ப்பிணிப் பெண்கள், பால்கொடுக்கும். பெண்களின் ஊட்டச்சத்தின் தரத்தை சர்வதேச அளவுக்கு உயர்த்த உரிய நடவடிக்கைகள் எடுத்தல்

★ அனைத்துப் பள்ளிகளிலும் எந்தவிதமான வன்முறைக்கும், தவறான பயன்பாட்டுக்கும் குழந்தைகள் ஆளாகாத சூழலை உருவாக்குதல்.

★ மனிதர்கள் கடத்தலை, குறிப்பாக குழந்தைகள் கடத்தலைத் தடுக்கும் சட்டங்களைக் கடுமையாக்குதல்.

★ குழந்தைகள் தொடர்பான எல்லா சட்டங்களையும் சரியாக அமலாக்குதல், அவை சரியாக நிர்வாகிக்கப்படுவதை தொடர்ந்து கண்காணித்தல்.

## முதியவர்களும், மாற்றுத் திறனாளிகளும்

★ வருமான வரி கட்டுபவர்களைத் தவிர அனைத்து முதியவர்களுக்கும் ஓய்வூதியம் வழங்குதல்.

★ எல்லா மாவட்டங்களிலும் முதியோர் இல்லம் அமைத்து, அங்கு சலுகை விலையில் உணவு கிடைக்க சமூக சமையற் கூடங்கள் அமைத்தல்.

★ சமூகத்தில் மாற்றுத் திறனாளிகளுக்கு கண்ணியமான வாழ்வு கிட்டும் வகையில் உரிய கொள்கைகள் வகுக்கப்பட்டு, வசதி செய்தல்.

## இராணுவம்

★ இந்தியாவின் முப்படைகளிலும் பணிபுரிய தகுதியுள்ள இளைஞர்களைத் தேர்ந்தெடுத்து, அவர்களுக்கு 4 ஆண்டுகாலம் மட்டுமே பணியளிக்கும் 'அக்னிவீர்' திட்டம், இராணுவ வீரர்களையே தினக்கூலிகளாக மாற்றுகிறது. 4 ஆண்டு கழித்து, ஓய்வூதியம் ஏதுமின்றி விடுவிக்கப்படும் இத்திட்டத்தை ரத்து செய்து, அவர்களுக்கு பணிப்பாதுகாப்பு, சமூகப்பாதுகாப்பு வழங்குதல்

★ 'ஒரு பதவி, ஒரு ஓய்வூதியம்' என்பதில் ஏற்படுத்தப்பட்டுள்ள அனைத்து குறைபாடுகளையும் கண்டறிந்து களைதல்

## உணவுப் பாதுகாப்பும், பொது விநியோகத் திட்டமும்

★ அனைவருக்கும் பொது விநியோகத்திட்டத்தின் பலன் கிடைக்க, தானியங்கள், பருப்பு வகைகள், சர்க்கரை, எண்ணெய் போன்றவைகளை வழங்குதல். ஆதார் அட்டை, விரல் ரேகை வைத்தல், நேரடியாக பணம் தரும் முறைகளை அகற்றுதல்.

★ கலப்படத்தை தடுக்க உணவுப் பாதுகாப்புச் சட்டங்களைக் கடுமையாக்குதல்.

## பழங்குடி, பட்டியலின, இதர பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்

★ இந்தியா ஒரு 'நல அரசு' ஆகும். வெகுமக்களின் நலன்களை அது பாதுகாக்க வேண்டும். இதற்காக கார்ப்பரேட் பெரு முதலாளிகளின் நிறுவன நலன்களை மட்டுமே பாதுகாக்கிற நிதி ஆயோக்கைக் கலைத்து, அனைத்து மாநிலங்களும் பங்கேற்கும் வகையில் திட்டக் குழுவை நிறுவுதல்.

★ காடுகளை உருவாக்குதாகப் பொய் சொல்லி, பழங்குடி விவசாயிகளை அப்புறப்படுத்துவதைத் தடுத்தல். பஞ்சாயத்து (பட்டியல் பகுதி விரிவாக்கச்) சட்டம், வன உரிமைச் சட்டம் 2006, ஆகியவற்றை நீர்த்துப் போகாமல் அமலாக்குதல்.

★ பட்டியலின, பழங்குடி, பிற்படுத்தப்பட்டவர்களுக்கு முறையான இட ஒதுக்கீடு தனியார் துறை, அரசு தனியார் கூட்டிணைப்பு (PPP model) உட்பட எல்லா பிரிவுகளிலும் உறுதி செய்தல்.

★ மனித கழிவுகளை மனிதன் அகற்றுவது எந்த வடிவத்தில் இருந்தாலும் முடிவுக்கு கொண்டு வருதல். அவர்களுக்கு கண்ணியமான வாழ்க்கையை உத்திரவாதப்படுத்துதல்,

★ விளிம்புநிலைப் பிரிவினர், பழங்குடி மக்களின் குழந்தைகளின் கல்வி, திறன் பயிற்சித் திட்டங்களுக்கான நிதி கார்ப்பரேட் சமூகப் பொறுப்புணர்வு திட்டத்திலிருந்து பெறுதல்.

★ முக்கியமான பகுதிகளில் உள்ள பழங்குடி மக்களவை அரசியலமைப்புச் சட்டத்தின் ஐந்தாவது அட்டவணையில் கொண்டு வந்து, பஞ்சாயத்து சட்டப்படி (PESA) கிராம சபைகள் மூலமாக அவர்களின் உரிமைகளைப் பாதுகாத்தல்.

★ பழங்குடி பட்டியலில் இருந்து விடுபட்ட பழங்குடி மக்களை, அப்பட்டியலில் சேர்ப்பது குறித்து பரிசீலித்தல்.

**சிறுபான்மை மக்கள்**

★ நீதிபதி ராஜேந்தர் சச்சார் குழு, ரங்கநாத் மிஸ்ரா குழு ஆகியவற்றின் பரிந்துரைகளை அமலாக்குதல்.

★ தேசிய சிறுபான்மை ஆணையத்துக்கு அரசியலமைப்புச் சட்டத் தகுதி வழங்கப்படும்.

★ கும்பல்கூடி அடித்துப் படுகொலை செய்வதைத் தடுக்க, நிகழ்விட அரசு அதிகாரிகள், கிரிமினல் குற்றச் செயல்களுக்குப் பொறுப்பாக்கப்படும் வகையில் புதிய சட்டத்தைக் கொண்டுவருதல்.

★ தலித்துகள் எந்த மதத்தைச் சார்ந்திருந்தாலும் இடஒதுக்கீடு நலன்களை வழங்குதல்.

**கல்வி**

★ அனைவருக்கும் ஆரம்பக்கல்வி முதல் பனிரெண்டாம் வகுப்பு வரை இலவசக் கல்வி வழங்குதல், அதை கல்வி உரிமை சட்டத்தின் கீழ் கொண்டு வருதல்.

★ ஒட்டு மொத்த உற்பத்திக் குறியீட்டில் (GDP) கல்விக்காகும் செலவை பத்து சதமாக உயர்த்துதல்.

★ அனைத்து மட்டங்களிலும் உள்ள ஆசிரியர் காலி இடங்களை, முறையான தேர்வு மூலம் இட ஒதுக்கீட்டு முறைப்படி நிரப்பி ஆசிரியர் பற்றாக்குறையை முடிவுக்கு கொண்டு வருதல்.

★ நிலுவையில் உள்ள கல்வி உதவித்தொகைகளுக்கு உடனடியாக பணம் விடுவித்தல், பின்தங்கிய பின்புலம் கொண்ட மாணவர்கள் ஆராய்ச்சியில் ஈடுபட உதவித்தொகையை அதிகரித்தல்.

★ வேலைவாய்ப்பை உருவாக்கும் கல்வியும், தொழிற் பயிற்சிக் கல்வியும் தரும் நிறுவனங்களையும் பெருமளவில் நிறுவுதல்.

★ கல்வி நிறுவனங்கள், பல்கலைக்கழகங்களின் சுயேச்சையான செயல்பாட்டை மீண்டும் நிலைநிறுத்திப் பாதுகாத்தல்.

★ மோடி அரசு விஞ்ஞானத்துக்கு விரோதமான, மூடநம்பிக்கைகளை வளர்க்கிற வகையில் பல்வேறு படங்களை திருத்தி உள்ளது. வரலாற்றையும் திரித்து எழுதியுள்ளார்கள். அவற்றை மாற்றி, பகுத்தறிவையும், அறிவியல் மனோபாவத்தையும் வளர்க்கும் வகையிலும்,

வகுப்புவாதம், அடிப்படைவாதத்திற்கு எதிராகவும் பாடத்திட்டத்தில் மாற்றம் கொண்டு வருதல். அரசியல் அமைப்புச் சட்டம் வகுத்துள்ள மதச்சார்பின்மைக் கருத்துக்கள், உளமாற கல்வித் துறையில் கையாளப்படுதல்.

★ கல்வியில் கூட்டாட்சித் தன்மையைப் பாதுகாத்தல், மீண்டும் கல்வியை மாநில பட்டியலுக்கு கொண்டு வருதல்

**மக்கள் நல்வாழ்வு**

★ ஒட்டு மொத்த உற்பத்தியில் **(GDP)** ஆறு சதம் மருத்துவத்துறைக்கு ஒதுக்குதல்.

★ ஒட்டு மொத்த தனியார் மருத்துவ நிறுவனங்களை ஒழுங்குபடுத்த உடனடி நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்

★ மருத்துவக் கல்வி வணிகமயமாக்கப்படுவதைத் தடுக்க, நன்கொடை, கல்விக் கட்டணம் போன்றவற்றைக் குறைத்தல்.

**ஆரம்ப சுகாதார கட்டமைப்பைப் பலப்படுத்துதல்**

★ தனியார் காப்பீடு மூலமான சுகாதார வசதிகளுக்கு பதிலாக பொதுத்துறை மருத்துவமனை சுகாதார வசதிகளை மேம்படுத்துதல்.

**சுற்றுச்சூழல், காடுகள் மற்ற இயற்கை வளங்கள்**

★ நதிகளை இணைப்பது பற்றி ஒரு பொதுக்கருத்தை உருவாக்குதல்.

★ காடுகள், ஆறுகள், நீர்நிலைகளைப் பாதுகாத்தல்.

★ காடுகள், ஆற்றுப்படுகைகள், நீர் நிலைகளில் மணல், மண் தோண்டி எடுக்கும் மாஃபியா கும்பல் ஏற்படுத்தி உள்ள ஆக்கிரமிப்புகளை அகற்றுதல் இவற்றை சாமானிய மக்கள் தேவைகளுக்கு பயன்படுத்தும் முறையில் ஒழுங்கமைத்தல்

★ பருவ நிலை மாற்றத்தால் கடும் பாதிப்புக்கு உள்ளாகும் நாடுகளில் இந்தியா ஆறாவது இடத்தில் இருக்கிறது. பருவ நிலை மாற்றத்தால் ஏற்படும் பொருளாதார இழப்பு அதிகரித்து வருவதாக அறிக்கைகள் கூறுகின்றன. எனவே, புவி வெப்பமயமாதலின் பாதகமான விளைவுகளை குறைக்க உருப்பெறும் நடவடிக்கைகளை எடுத்தல்.

**தேர்தல் சீர்திருத்தம்**

★ மக்கள் பிரதிநிதித்துவச் சட்டம் திருத்தப்பட்டு, தற்போது இருக்கும் தேர்தல் முறைக்கு பதிலாக விகிதாச்சார பிரதிநிதித்துவ முறை கொண்டு வருதல். இதன் மூலம் தேர்தல் களம் வேட்பாளர்களுக்கும், போட்டியிடும் கட்சிகளுக்கும் சமதளமாக இருப்பதை உறுதி செய்தல்.

★ தேர்தல் பத்திர திட்டத்தை உச்சநீதிமன்றம் சட்ட விரோதம் என்று தடை செய்துள்ளது. அரசு அதிகாரத்தை பயன்படுத்தி மிரட்டி பாஜக பணம் வசூல் செய்தது அம்பலப்படுத்தப்பட்டுள்ளது. இந்நிலையில் தேர்தலுக்கு நிதி அளித்தல், பணம், அடியாட்கள் மூலமாக தேர்தலை எதிர்கொள்ளுவதை எதிர்த்து ஒரு விரிவடைந்த சட்டம் கொண்டு வருதல். இந்திரஜித் குப்தா குழுவின் பரிந்துரைப்படி தேர்தலுக்கு அரசே நிதி அளிக்கும் முறையை அமலாக்குதல்.

★ அனைத்து அரசியல் கட்சிகளும் இலவசமாக பரப்புரை செய்யவும், நியாயமான முறையில் அனைத்து கட்சிகளுக்கும் ஊடகத்தில் இடம் கிடைக்கவும், தகவல்களையும், வாக்காளர் பட்டியலை பெறவும் உரிய வகையில் சட்டத்தைத் திருத்துதல்.

## நீதித்துறை, காவல்துறை சீர்திருத்தங்கள்

★ பெண்கள், பழங்குடி, பட்டியலின, பிற்படுத்தப்பட்ட, சிறுபான்மையினரை உள்ளடக்கிய பன்முகத்தன்மையை எல்லா மட்டங்களிலும் பாதுகாத்தல். இதற்கேற்ற வகையில் போதிய பிரதிநிதித்துவம் வழங்குதல்.

★ உள்ளூரளவில் ‘நியாய அவை’ களை உருவாக்க முயற்சி எடுப்பதன் மூலம் எளிதில், விரைவில் நீதி கிடைக்க வழி செய்தல். நீதி மன்றங்களில் குவிந்து கிடக்கும் வழக்குகளை விரைவில் தீர்க்கவும், சரியான நீதி கிடைக்கவும், முதலில் காலியாகவுள்ள நீதிபதி இடங்களைப் பூர்த்தி செய்தல்.

★ இந்திய தண்டனைச் சட்டம் குற்றவியல் சட்டம் மற்றும் சாட்சியங்கள் சட்டம் ஆகியவை பிரிட்டிஷ் அடிமைக்கால சட்டங்கள் என்று கூறி, அவற்றைவிட பிற்போக்கான சட்டங்களை மோடி அரசு கொண்டு வந்துள்ளது. அவற்றுக்கு இந்தியில் பெயர் உள்ளது. தேசத்துரோகம் குற்றம் என்பது தவறு என்று உச்ச நீதிமன்றம் சுட்டிக்காட்டி எறிந்தும் கூட, அந்த சொல்லை மட்டும் நீக்கிவிட்டு உள்ளடக்கத்தை அப்படியே வைத்து இந்த சட்டங்கள் இயற்றப்பட்டுள்ளன. இவற்றில் உள்ள குறைகளை நீக்குதல். சட்டவிரோத நடவடிக்கைகள் தடுப்பு சட்டம் **(UAPA)**, சிறப்பு ஆயுதப் படை சட்டம், தேசிய பாதுகாப்புச் சட்டம், வெளிநாட்டு உதவிகளை ஒழுங்குபடுத்தும் சட்டம் **(FCRA)**, போன்றவற்றை தவறாக பயன்படுத்துவதைத் தடுக்கும் வகையில் திருத்தம் செய்தல் அல்லது நீக்குதல். இதன்மூலம் எதிர்கருத்தை ஒடுக்குவதையும், தண்டனையிலிருந்து தப்புவதையும் தடுத்தல்.

## பத்திரிகைச் சீர்திருத்தம்

★ பத்திரிகை சுதந்திரத்தை பறிக்கும் வகையில் இயற்றப்பட்டுள்ள பத்திரிகைகள் மற்றும் பதிவுச் சட்டத்தின் பாதகமான அம்சங்களை நீக்குதல்

★ கண்ணியமான சம்பளமும், பணிப் பாதுகாப்பும் எல்லா பத்திரிகை நிறுவனங்களிலும் பணிபுரியும் எல்லா பத்திரிகையாளர்கள், ஊழியர்களுக்கு வழங்கும் வகையில் பத்திரிகையாளர் சட்டத்தைத் திருத்துதல்.

★ அரசு ஒலிபரப்பு தொலைக்காட்சி நிலையங்களுக்கு சுதந்திரம் அளித்தல்.

★ மின்னணு ஊடகங்களை ஒழுங்குபடுத்துவதற்காக, கருத்துச் சுதந்திரத்தை தடுக்காத வகையிலும், அதே சமயம் பொய்யான தகவல்களை பரப்புவதை, உருவாக்குவதை தடை செய்யும் வகையிலும் அரசின் கட்டுப்பாட்டில் இல்லாத, ஒரு சுயேச்சையான அமைப்பை உருவாக்குதல்.

## வெளிநாட்டில் வாழும் இந்தியர் தொடர்பான பிரச்சினைகள்

★ வெளிநாட்டில் வாழும் இந்தியர்கள் **(NRI)** தொடர்பான நல நிதி, காப்பீடு, மறுவாழ்வு போன்ற பிரச்சினைகளுக்கு தீர்வுகாணுதல்.

★ இறந்தவர்களின் உடலை இந்தியாவிற்கு இலவசமாக கொண்டுவர போதுமான ஏற்பாடுகள் செய்தல்.

**பண்பாடு**

★ பன்மைத் தன்மை வாய்ந்த, பலதரப்பட்ட கலாச்சாரங்களையும், அவற்றின் விழுமியங்களையும், தட்டையான, ஒற்றைத் தன்மைத் தாக்குதல்களில் இருந்து பாதுகாத்தல்.

★ எல்லா மொழிகளையும் பாதுகாத்தல், பேணி வளர்த்தல்.

★ பழங்குடி மக்கள் மொழிகளுக்கு எழுத்து வடிவம் உருவாக்குதல், வளப்படுத்துதல்.

★ மணிப்புரி மொழிக்கு செவ்வியல் மொழித் தகுதி வழங்குதல்.

**கூட்டாட்சித் தத்துவம்**

★ மாநிலங்களுக்கு இடையிலான, மண்டல அளவிலான குழுக்களைத் திறம்பட செயல்படுத்துதல்.

★ மத்திய அரசு மாநில அரசுகளுக்கு இடையில் அதிகாரத்தையும், வளங்களையும் உரிய பங்கீடு செய்வதற்காக திட்டக்குழுவை மீண்டும் நிறுவுதல்.

★ 356 வது பிரிவை அரசு தவறாக பயன்படுத்துவதை தடுத்தல், ஒன்றிய ஆளுங்கட்சி ஆளாத மாநிலங்களில், ஆளுநர்கள் அதிகாரத்தைப் பயன்படுத்தி போட்டி அரசு நடத்துவது உச்ச நீதிமன்றம் வரை அம்பலப்பட்டுள்ள நிலையில், ஆளுநர் பதவியை அறவே ஒழித்தல்

★ புதுச்சேரி, தில்லி போன்ற ஒன்றியப் பகுதிகளுக்கு முழு மாநிலத் தகுதி வழங்க, முன்முயற்சி எடுத்தல்.

★ ஒன்றிய மற்றும் மாநில அதிகாரப் பொதுப் பட்டியலில் இருக்கும் பொருள் குறித்து மத்திய அரசு முடிவு எடுப்பதற்கு முன்னர், சம்மந்தப்பட்ட மாநில அரசுகளை கலந்து ஆலோசிப்பதை நிபந்தனையாக்குதல்.

**நிறுவனங்களின் தன்னாட்சி**

★ சட்டப்பூர்வமான அந்தஸ்தும், அதிகாரமும் மத்திய புள்ளியியல் கழகத்திற்கு வழங்குதல்.

★ அரசு கூறுகிற புள்ளி விவரங்களை மக்கள் வெளிப்படையாக சரிபார்க்கும் வகையில், **NSSO** தேசிய மாதிரி கணக்கெடுப்பு நிறுவனத்தின் அறிக்கை வெளி யிடப்படுவதைக் கட்டாயமாக்குதல்.

★ தேர்தல் ஆணையம், கணக்காளர் அலுவலகம் **(CAG)**, ரிசர்வ் வங்கி **(RBI)**, மத்திய புலனாய்வு நிறுவனம் **(CBI),** மத்திய கண்காணிப்பு ஆணையம் **(CVC)** போன்ற நிறுவனங்கள் மற்றும் இதர கண்காணிப்பு அமைப்புகளின் சுதந்திர செயல்பாட்டை உறுதி செய்தல்.

## வட கிழக்கு பிரச்சினைகள்

★ குடியுரிமை திருத்தச் சட்டத்தை ரத்து செய்தல்

★ மணிப்பூருக்கு சிறப்பு அந்தஸ்தும் அதிக அதிகாரமும் மீண்டும் வழங்குதல்.

★ இந்திய மியான்மர் எல்லையை மறு அளவீடு செய்து வேலியிடுதல்.

★ இந்திய நாகா ஒப்பந்த முன்வடிவை வெளிப்படையானதாக்கி, சம்மந்தப்பட்ட அனைத்து மாநிலங்களையும் கலந்தாலோசித்த பின்பு இறுதி செய்தல்.

## காஷ்மீர் நிலைமை

★ காஷ்மீர் மாநிலம் இரண்டாகப் பிரிக்கப்பட்டதை ரத்து செய்தல், உடனடியாக தேர்தல் நடத்தி மாநில அரசை நிறுவுதல்

★ மோடி அரசு இராணுவத்தைப் பயன்படுத்தி காஷ்மீரின் இயல்பு வாழ்க்கையை சீர்குலைத்து எந்நேரமும் பதட்டச் சூழலில் வைத்திருக்கிறது. காஷ்மீரில் நடப்பது வெறும் பாதுகாப்பு, சட்ட ஒழுங்கு பிரச்சினை அல்ல. அரசியல் தீர்வு அடையும் வகையில் சம்மந்தப்பட்ட அனைவரையும் உள்ளடக்கிய பேச்சுவார்த்தை நடத்தி தீர்வு காணுதல்.

## வெளிநாட்டு கொள்கை

★ ஏகாதிபத்திய சக்திகளின் நெருக்கடிகளுக்கு ஆளாகாமல் சுதந்திரமான வெளிநாட்டுக் கொள்கையைக் கடைபிடித்தல்.

★ ஐக்கிய நாடுகள் சபை, **BRICS, SCO** போன்ற பன்னாட்டு அமைப்புகளை வெறும் விளம்பரத்துக்கு பயன்படுத்திக் கொண்டிராமல், உலக அமைதிக்கும், மண்டல பொருளாதார வளர்ச்சிக்கும் உகந்த முறையில் வடிவமைக்க இந்தியா முன்கை எடுத்து பங்காற்றுதல்.

★ அர்த்தப் பூர்வமான பங்களிப்பு, தெற்கு தெற்கு ஒத்துழைப்பு போன்ற உறவுகள் மூலம், அண்டை நாடுகளுடன், கூட்டுச்சேரா கொள்கை வழியில், உறவுகளை மேம்படுத்துதல்.

★ பாலஸ்தீனம் என்ற நாட்டை அழிப்பதற்கு, கூசாமல் இனப்படுகொலையை உலகத்தின் கண் முன்பு இஸ்ரேல் நடத்திக் கொண்டிருக்கிறது. இதில் இஸ்ரேலை வன்மையாக கண்டிப்பதற்கு பதிலாக மோடி அரசு அனுசரணையான போக்கை மேற்கொள்கிறது. போதாதென, இஸ்ரேலுக்கு உதவுவதற்காக இந்தியாவிலிருந்து தொழிலாளர்களை அனுப்புகிறது. காசா பகுதியில் மீதம் இருக்கும் பாலஸ்தீனர்களாவது காப்பாற்றப்படுவதற்கும், போர் நிறுத்தம் செய்வதற்கும் உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்

★ இலத்தீன் அமெரிக்க நாடுகளில், குறிப்பாக வெனிசூலாவில் அமெரிக்காவின் ஆக்கிரமிப்புக் கொள்கைகளுக்கு எதிரான நிலை எடுத்தல்.

## அறிவியல் தொழில்நுட்பம்

★ பெட்ரோலிய எரிபொருள், அணுமின் சக்திக்கு மாற்றாக, புதுப்பிக்கத்தக்க எரிசக்தி மீது அதிக கவனம் செலுத்துதல்.

★ புதிய அணுசக்தி உலை இறக்குமதி செய்வதில்லை. அமெரிக்காவுடன இப்போது உள்ள ஒப்பந்தத்தையும் (வெஸ்டிங்ஹவுஸ்), அரேவாவுடன் (பிரான்சு) தற்போது உள்ள ஒப்பந்தத்தையும் இரத்து செய்தல்.

## ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டுக்கு பொது முதலீட்டை அதிகரித்தல்.

★ இந்தியாவின் தொன்மையான அறிவியல் பற்றிய வரலாற்று ஆராய்ச்சிக்கு ஊக்கமளித்தல்.

★ எல்லா மொழிகளிலும் அறிவியல் பாடங்கள் கிடைத்தல் வேண்டும். இதற்கான பாடநூல்களையும், அறிவியல் அடிப்படை நூல்களையும் பெருமளவில் மொழி பெயர்த்தல்.

★ கல்வி, அறிவியல் கழகங்களுக்கான தன்னாட்சியை அதிகரித்தல்.

★ அறிவுசார் சொத்துரிமை மூலம் பெறப்படும் பலன்கள், பெருமுதலாளி நிறுவனங்களின் நலனுக்காக அல்லாமல், மக்களின் நலன்களைப் பாதுகாக்கும் வகையில் மாற்றுதல்.

★ தொழில் நுட்ப மேம்பாட்டிற்காக போடப்படும் அரசு தனியார் கூட்டு ஒப்பந்தங்களில் (PPP), அரசினால் நிதி அளிக்கப்படும் ஆய்வுகள் தனியார் இலாபத்திற்கு பயன்படாத வகையில் உரிய வழிமுறைகள் ஏற்படுத்துதல்.

## வேண்டுகோள்:

நாடு இப்போது இருக்கும் நிலையில் ஆட்சியிலிருந்து பா.ஜ.க.வை அகற்றுவது கட்டாயத் தேவையாகும். விடுதலைப் போராட்டத்தின் முன்னணியில் இருந்த இந்திய கம்யூனிஸ்டு கட்சி வெகுமக்களின் போராட்டத்திற்கு அளப்பரிய தியாகங்களை புரிந்துள்ளது. வகுப்புவாதம், பாசிசம், குழுவாதம், பிரிவினைவாதம், கார்ப்பரேட் கொள்ளைகள் ஆகியவற்றுக்கு எதிராகவும், மக்கள் விரோத சக்திகளுக்கு எதிராகவும் இந்தியக் கம்யூனிஸ்டு கட்சி தொடர்ச்சியாகப் போராடி வந்துள்ளது.


இந்த நாட்டை, அதன் அரசியலமைப்புச் சட்டத்தை, ஜனநாயக உள்ளடக்கத்தை பாதுகாக்கவும், நமது சமூகத்தின் மதச் சார்பற்ற ஜனநாயக கட்டமைப்பு, கல்வி, சுகாதாரம், வீட்டுவசதி, அனைவருக்கும் கண்ணியமான வாழ்க்கை ஆகியவற்றுக்கும் இந்திய கம்யூனிஸ்டு கட்சி தொடர்ந்து போராடி வருகிறது. அனைவரையும் உள்ளடக்கிய பொருளாதார வளர்ச்சியும், சமூக நீதியும் கொண்ட கூட்டாட்சிக்காகப் போராடுகிறது.

எனவே, மதச்சார்பற்ற, ஜனநாயக, மக்களுக்கு ஆதரவான மாற்றாட்சி அமையவும், இடதுசாரிகளை பலப்படுத்தவும், இந்திய கம்யூனிஸ்டு கட்சி வலிமைபெறவும் 18–வது மக்களவைத் தேர்தலில் வாக்களிக்க வேண்டும் என்று இந்திய மக்களை, வாக்காளர்களைக் கட்சி கேட்டுக் கொள்கிறது.

**சர்வாதிகாரம், மதவெறி, கார்ப்பரேட் ஆதரவு**
**வலதுசாரி அரசியலை வீழ்த்த!**
**நாட்டைக் காக்க, அரசியல் சாசனத்தைப் பாதுகாக்க,**
**ஜனநாயகத்தையும் மதச்சார்பின்மையும் காப்பாற்ற,**
**பாஜக மற்றும் அதனோடு கள்ளக் கூட்டணி வைத்துள்ள**
**அஇஅதிமுக கட்சிகளைத் தோற்கடிப்பீர்!**

# இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி உள்ளிட்ட திமுக தலைமையிலான இந்தியா கூட்டணி கட்சிகளின் வேட்பாளர்களுக்கு வாக்களிப்பீர்!

**சின்னங்கள்**

| | | |
|---|---|---|
|  உதயசூரியன் |  கை |  கதிர் அரிவாள் |

| | | | |
|---|---|---|---|
|  அரிவாள் சுத்தியல் நட்சத்திரம் | விசிக |  ஏணி | மதிமுக |